**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.83/2021**

**2025 ஆம்** வருடம் ஜுலை மாதம் 16 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சகர்பான் பீவி | ஜாதி | : | |
| க.பெ | : | அபுபக்கர் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | கோட்டைபட்டிணம் | சமயம் | : | |
| தாலுகா | : | மணமேல்குடி, புதுக்கோட்டை | வயது | : | 47/2025 |
| தேதி | : | 16.07.2025 | | | |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி உங்களது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். உங்கள் உடன்பிறந்த சகோதரன் பிரதிவாதிக்கு வாரிசுள் இரண்டு பேர் என்றால் சரிதான். அவர்கள் பெயர் முகமது ரோசன் சபிகா, முகமது பைசல் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி திண்டுக்கல் நீதிமன்றத்தில் நீங்கள் கிரையம் கொடுத்த சொத்து செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வேறு சொத்து சம்மந்தமாக திண்டுக்கல் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது, இந்த சொத்து சம்மந்தமாக இல்லை. நீங்கள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்து 3 வருடம் ஆகிவிட்டது, எனவே ரூ.10,000/- த்தை நான் எடுத்துச்சென்று பிரதிவாதியிடம் கொடுத்து தானசெட்டில்மெண்ட்டை கேன்சல் செய்து கொடுக்கச் சொன்னேன்.

பணத்தை செலுத்த நான் தயாராக உள்ளேன் என்றும், தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்து கொடுக்கச் சொல்லி நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன். தானசெட்டில்மெண்ட்டை எந்த வருடம் பிரதிவாதியிம் இருந்து நீங்கள் பெற்றீர்கள் என்றால் பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை. உங்கள் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் வருடம் எனக்கு நினைவில்லை, 10 வருடங்கள் இருக்கும். இந்த வழக்கு சொத்தில் ஒரு வீடும், ஒரு கடையும் உள்ளது என்றால் சரியல்ல, கடை மட்டும் தான் உள்ளது. மேற்சொன்ன கடையை பிரதிவாதியின் மனைவி தான் நடத்தி வருகிறார் என்றால் இல்லை.

நீங்கள் ரூ.10,000/- ஐ பிரதிவாதியிடம் கொண்டு போய் கொடுத்ததாக சொல்லும் தேதி என்னவென்றால் 3 வருடம் முடிந்து உடனடியாக 2020 ல் நான் சென்று கேட்டேன். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தெரியாது. தாவா சொத்தை பிரதிவாதியிடம் இருந்து நீங்கள் பெறும்போது பிரதிவாதி நல்ல மனநிலையில் இல்லை என்றால் சரியல்ல, நல்ல மனநிலையில் தான் இருந்தார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க இந்த வழக்கு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor